**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.124 /2019**
**Connected with**
**அசல் வழக்கு எண்.103 /2019**

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04–ம் நாள் சனிக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.11.2023 | தந்தை பெயர்: | சாமிநாதன் |
| பெயர்: | அம்பலவாணன் (PW-2 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 65 /2023 |
| தொழில்: | | | |

<u>**முதல் விசாரணை : 04.11.2023.**</u>

நான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். நான் ஸ்ரீ வேலூர் வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம், வைத்தீஸ்வரன் கோயிலில் DCB எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். நான் அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். எங்கள் அலுவலகத்தில் DCB எண்.42 யார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் வீராசாமி, த/பெ. அய்யாறு என்பவர் பெயரில் பதியப்பட்டுள்ளது அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **சா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒரு DCB பதிவேட்டில் எந்தெந்த புல எண்கள் சம்பந்தப்பட்டது என்ற பதிவு காணப்படும் என்றால் சரிதான். DCB எண்.42-க்கு எந்தெந்த புல எண்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் புல எண்.19/1 விஸ்தீரணம் 0.8 செண்ட் ஆகும், புல எண்.19/2 விஸ்தீரணம் 1 ஏக்கர் 63 செண்ட் ஆகும், புல எண்.20/4-ல் விஸ்தீரணம்

0.20 செண்ட் ஆகும், ஆக கூடுதல் 1 ஏக்கர் 91 செண்ட் ஆகும். மேற்படி நிலங்களுக்கு குத்தகைதாரர் குத்தகை செலுத்தும் பட்சத்தில் DCB வரிசை எண் குறிப்பிட்டு ரசீது வழங்கப்படும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 வரிசையானது எந்த DCB எண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் DCB 42 எண்ணுக்காக தான் வழங்கப்பட்டுள்ளது. குத்தகைதாரரோ அல்லது சாகுபடிதாரரோ குத்தகை செலுத்தும் பட்சத்தில் யார் பெயரில் ரசீது வழங்கப்படும் என்றால் DCB பதிவு செய்யப்பட்டுள்ள குத்தகைதாரர் பெயரில் ரசீது வழங்கப்படும். DCB-யில் பதிவு செய்யப்பட்டுள்ள குத்தகைதாரரே சாகுபடி செய்து வருகிறீர்களா என்ற விவரம் எங்களுக்கு நேரிடியாக தெரியுமா என்றால் தெரியாது.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கோயிலுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை தனிநபர்கள் யாரும் வாங்கவோ, விற்கவோ முடியாது என்றால் சரிதான். அதே போன்று கோயில் நிலங்களை அடமானம், பெந்தகம், பரிவர்த்தனை செய்ய முடியாது என்றால் சரிதான். கோயிலார் அனுமதியில்லாமல் தனிநபர் யாரும் பணத்தை பெற்றுக்கொண்டு அவர்களுக்குள் குத்தகை மாற்றி கொள்ள இயலாது என்றால் சரிதான். எங்களுடைய ஆவணங்கள் படி தாவா சொத்தானது வீராசாமி வகையறா குடும்பத்தாரின் குத்தகையில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். எங்கள் ஆவணப்படி தாவா சொத்தானது வீராசாமி குடும்பத்தாரின் அனுபவித்தில் தான் இருந்து வருகிறது என்றால் இருக்கும். கோயில் நிலங்களை பொறுத்து குத்தகைதாரர்கள் எங்களது அனுமதியில்லாமல் குத்தகை உரிமையை மாற்றி கொள்ள இயலாது என்றால் சரிதான். DCB ரசீதானது யார் வந்து குத்தகைதாரருக்காக பணம் செலுத்தினாலும் குறிப்பிற்காக பணம் செலுத்துபவர் பெயர் குறிப்பிட்டு ரசீது வழங்கப்படும் என்றால் சரிதான். DCB ஒரு நபர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்து அவருக்காக பணம் செலுத்தும் நபர் தான் அனுபவித்தில் இருந்து வருகிறாரா என்று எங்களுக்கு தெரியாது என்றால்

சரிதான். எங்களது அலுவலக ஆவணங்களின்படி தாவா சொத்தானது இன்றையதேதி வரை வீராசாமி பெயரில் தான் பதிவு செய்யப்பட்டு அனுபவித்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.